முச்சந்தி முரளி



“மத்தியகுழு புத்தியா
முடிவெடுக்குமோ?
மத்திமமா
முடிவெடுக்குமோ?”

Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூ॥ 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 307

சனிக்கிழமை
28 செப்ரெம்பர் 2024

புரட்டாதி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# உச்சக்கட்டப் பரபரப்பு நிலையில் தமிழரசின் மத்திய குழு இன்று!

கொழும்பு, செப்ரெம்பர் 28

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் வவுனியாவில் இன்று காலை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 11



## பதில் பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமனம்!

கொழும்பு, செப். 28

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். 11

இளையோருக்கு இடமளிக்கும் வகையில்

## நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் விலகுகிறேன்

### விக்னேஸ்வரன் முன்மாதிரி அறிவிப்பு

கொழும்பு, செப். 28

இளையோருக்கு இடமளித்து இம்முறை தேர்தலில் போட்டியிடமாட்டேன் ஆனால் எனது அரசியல் சேவை தொடரும் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 11

## செல்லுபடியற்ற வாக்குகள் இம்முறை மூன்று மடங்கு!

கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகையில், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலின்போது செல்லுபடியற்ற வாக்குகள் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரிவு :- பக். 02

## எளிமையாக இடம்பெற்ற ஆளுநரின் பதவியேற்பு!

யாழ்ப்பாணம், செப். 28

வடமாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள நாகலிங்கம் வேதநாயகனின் பதவியேற்பு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் எளிமையான முறையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி த. சத்தியமூர்த்தி, தேசிய மக்கள் 11

## முன்னாள் எம்.பி.க்களின் பாதுகாப்புகள் வாபஸ்!


### ஜனாதிபதி அநுர அதிரடி



கொழும்பு, செப். 28

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஜனாதிபதி அநுரவால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற நாள்முதல் தற்போது வரையில் ஒவ்வொரு விடயங்களிலும் பல்வேறு அதிரடியான முடிவுகளையும், உத்தரவுகளையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பிறப்பித்து 11



## வவுனியாவில் விபத்து இளைஞர் உயிரிழப்பு!

வவுனியா, செப். 28

வவுனியா - பூவரசங்குளம் குருக்கள்புதுக்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 11

## யாழ்ப்பாணத்தில் விவசாயக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 28

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில், 'சூழல் நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி' எனும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில், ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி நான்காம் திகதி வெள்ளிக்கிழமை வரையிலான மூன்று தினங்கள் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. (அ-ச-20-17)

## சாவகச்சேரி மருத்துவமனையில் புதிய சத்திர சிகிச்சைக்கூடம்

யாழ்ப்பாணம், செப். 28

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்ட சத்திர சிகிச்சைக்கூடம் நேற்று வெள்ளிக்கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சத்திர சிகிச்சை நிபுணர் பேராசிரியர் சு. ரவிராஜ் தலைமையிலான மருத்துவக் குழுவும், மேற்படி மருத்துவமனையில் புதிதாகப் 11



## தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 28

தவறான முடிவெடுத்து இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே உயிரிழந்தவராவார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## பாம்பு தீண்டி ஒருவர் சாவு!

யாழ்., செப். 28

யாழ்ப்பாணம் - சாவகச்சேரிப் பகுதியில் பாம்பு தீண்டி இளம் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் ஒத்துழைப்பு இலங்கைக்கு அவசியம்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 28

**இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் சவால்களுக்கு நாங்கள் தொடர்ந்தும் முகம்கொடுக்கும்போது சீனாவின் சகோதரத்துவம், ஒத்துழைப்பு மற்றும் தொடர்ச்சியாக பங்காளியாக இருப்பதை இலங்கை எதிர்பார்க்கிறது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகி றேன். அதற்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு சம்பந்தமாக தற்போது செயற்படுத்தி வரும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்காக சீன நிதி நிறுவனங்களினால் தொடர்ந்து வழங்கிவரும் ஒத்துழைப்பு அளப்பரியது. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் இருந்துவரும் நட்பு ரீதியான இராஜதந்திர தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நாங்கள் எதிர்பார்க்கிறோம் - என்றார். (ச)



# வளங்களைச் சுரண்டாத நல்லாட்சி அமையும்!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, செப். 28

நாட்டின் ஜனநாயக பொதுச்சேவைக்காக மக்களின் வளங்களைச் சூறையாடாது ஒன்றுபட்டு செயற்படுவோம் என்று புதிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு எதிரான கிளர்ச்சியின் பின்னர் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தின் பிரகாரம் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்தகால அரசாங்கங்களின் ஆட்சியில் கிடைக்கப்பெற்ற அனுபவங்களால் இழக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவேண்டிய தேவை எமக்குள்ளது.

இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலானது கட்சிகளின் தலைமையில் அல்லாது மக்களின் தலைமையில் நடைபெறுவதாக அமையவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-25, சி)

# புதிய கூட்டணியில் மலையக எம்.பி.கள்

கொழும்பு, செப். 28

ஜனாதிபதித் தேர்தலின்போது சுயாதீன வேட்பாளராகக் களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த மலையக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து பொதுத்தேர்தலை மையப்படுத்தி புதியதொரு கூட்டணியை அமைப்பதற்கான பேச்சுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வேலுகுமார், அரவிந்தகுமார் மற்றும் வடிவேல் சுரேஷ் ஆகியோரே புதிய கூட்டணியை அமைப்பதற்குரிய நகர்வுகளில் இறங்கியுள்ளனர்.

பொதுத்தேர்தலை மையப்படுத்தியே கூட்டணி உதயமாகவுள்ளதுடன், பிரதான தொரு கட்சியுடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

# எதிர்க்கட்சிகள் கூட்டிணைவு தொடர்கிறது பேச்சுகள்!

கொழும்பு, செப். 28

பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் இணைந்து கூட்டணியாகப் போட்டியிடுவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் இடம்பெற்றது.

இதில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளித்த முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் , ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பலமான எதிர்க்கட்சியொன்று அமைப்பது தொடர்பிலும் இங்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதும், இந்தப் பேச்சுவார்த்தையில் இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை.

பொதுத்தேர்தலில் கூட்டணியாகப் போட்டியிடுவதால் பெயர் மற்றும் சின்னம் என்பவற்றைத் தெரிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும்நாடாளுமன்ற முன்னாள்உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். (ச)

# நிறைவேற்று அதிகாரம் ஒழிப்புக்கு ஒத்துழைப்பு

## மொட்டுக்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, செப்.28

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தால் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.பீ. ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.


மொட்டுக்கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசமைப்பு மறுசீரமைப்பு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்குதல் போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டால் நாம் முழு ஆதரவு வழங்குவோம்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# ஆசிய வங்கியின் தலைமை; ரணிலை ஏற்குமாறு அழைப்பு?

கொழும்பு, செப். 28



ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமைப் பதவியை ஏற்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. எதிர்வரும் மார்ச் மாதம் முதல் இப்பதவியை ஏற்குமாறு அவரிடம் ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், இது தொடர்பில் தமது பதிலை ரணில் விக்கிரமசிங்க இன்னும் வழங்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணயநிதியத்துடன் இணைந்து செயற்பட்ட விதத்தை அவதானித்த பிறகே அவருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது.

இனி நாடாளுமன்ற அரசியல் பயணத்தில் ஈடுபடப்போவதில்லை என ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க.வுக்கு தெரியப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

# எம்.பி.க்களின் ஓய்வூதியம் ‘கட்’

கொழும்பு, செப்.28

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமையால் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 85 பேருக்குரிய ஓய்வூதியமும் ஏனைய சலுகைகளும் இல்லாதுபோயுள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அரசமைப்பு சட்டத்தின் பிரகாரம் 5 வருட நாடாளுமன்ற சேவைக்காலத்தை ஆற்றிமுடிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேற்படி சலுகை வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25, சி)

# திலித்துடன் திலும் அமுனுகம


கொழும்பு, செப். 28

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து பொதுத்தேர்தலுக்கான நாள் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் தென்னிலங்கை அரசியல் களத்தில் மீண்டும் கட்சித் தாவல்கள் ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்திருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திலும் அமுனுகம, மௌபிம ஜனதா கட்சி பக்கம் தாவியுள்ளார். இவ்வாறு கட்சி தாவிய திலும் அமுனுகம, மௌபிம ஜனதாக் கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட தொழிலதிபர் திலித் ஜயவீரவே மௌபிம ஜனதாக் கட்சியின் தலைவராகச் செயற்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் வட்டுக்கோட்டையில் உணர்வுபூர்வம்

யாழ்ப்பாணம், செப். 28

**தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையின் ஏற்பாட்டில் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.**

இதன்போது தியாக தீபம் திலீபனின் நினைவுருவப்படத்துக்கு பொதுச்சுடரேற்றி மலரஞ்சலியுடன் அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், முன்னாள் வலி. மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் நாகரஞ்சினி, காரைநகர் பிரதேசசபையின் உபதவிசாளர் விஜயன், பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர்களான ஜெயந்தன், அனுசன், சசி, மகளிர் அணியினர் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச-125)

# எயார்லைன்ஸ் மீது வழக்குத் தாக்கல்

கொழும்பு, செப். 28

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இந்திய சட்டத்தை மீறியதாக டெல்லி மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் டெல்லி அலுவலகத்தில் கடமையாற்றிய பெண் உத்தியோகத்தர் ஒருவரை பாலியல்ரீதியாக துன்புறுத்தியதாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் டெல்லி அலுவலக முகாமையாளர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நவம்பர் 20ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ச-6)

# பதவி விலகல்

கொழும்பு, செப்.28

அரச வாணிப கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் ஆசிரிவலிசுந்தர கடந்த புதன்கிழமை தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். அவர் தனது பதவிவிலகல் கடிதத்தை நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். ஸ்ரீ வர்த்தனவிடம் கையளித்துள்ளார்.

அவரது வெற்றிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கை நிதி அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, சி)

# ஐ. ம.சக்தியில் பதவி மாற்றம்

கொழும்பு, செப். 28

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆகியவற்றின் பிரதான பதவி நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், 2024 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளராக கபீர் ஹாசிம், ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்டத் தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவால் நியமிக்கப்பட்டனர். (ச)

# ஏலத்துக்கு வருகின்றன சொகுசு வாகனங்கள்

கொழும்பு, செப். 28

கடந்த அரசாங்கங்களின் போது முன்னாள் அமைச்சர்கள், செயலாளர்கள், ஊழியர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் நண்பர்கள் பயன்படுத்திய பல கோடி ரூபா பெறுமதியான சொகுசு வாகனங்களை ஏலத்தில் விடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

விற்பனை செய்வது அல்லது பொது ஏலத்தில் விற்று பணத்தை திறைசேரிக்கு வரவு வைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதேவேளை, நீண்டகாலமாக அரச வாகனங்களை துஷ்பிரயோகம் செய்தவர்கள் அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக முன்னெடுக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)



# மீட்கப்பட்ட வாகனங்கள் அத்தியாவசிய சேவைக்கு

கொழும்பு, செப். 28

ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் கொண்டு வந்து விடப்பட்ட சொகுசு வாகனங்களை அத்தியாவசிய சேவைக்குப் பயன்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள், அதிகாரிகளின் பாவனையில் 833 சொகுசு வாகனங்கள் பாவனையில் இருந்துள்ளதாகவும், அவற்றில் 29 வாகனங்களுக்கு என்ன நடந்தது என்பது 2022ஆம் ஆண்டே தெரியாமல் போயிருந்ததாகவும் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட 253 வாகனங்கள் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6-சி)




# தினம் தெரியுமோ?

**கோ**லியாத் மாதிரி வந்து இப்ப கோமாளியா மாறி மறியலுக்குப் போயிருக்கிறார் டாக்குத்தர் அர்ச்சுனா. சாவகச்சேரி ஆஸ்பத்திரிப் பிரச்சினைக்கு அர்ச்சுனா உண்ணாமல் உறங்காமல் ஒரே பேஸ்புக் லைவ் வீடியோக்கள் விட்டு, தன்னைத் தவிர மிச்ச டாக்குத்தர்மாரெல்லாம் மாபியாக்கள் எண்ட கணக்கில கதையளந்தார். எல்லாரும் மோசடிக்காரர் எண்டும், சனத்தின்ர காசைப் பிடுங்கிறதிலதான் அவை குறியா இருக்கினம் எண்டும் சில டாக்குத்தர் மாரின்ர பேரையும் சொல்லிக் குற்றம் சாட்டியிருந்தார். இதுகளைக் கேட்டிட்டு எங்கட சனமும் சிலிர்த்துப் போய் சில்லறையெல்லாம் சிதறவிட்டு, அர்ச்சுனாவுக்காக தன்ரபாட்டிலையே ஆயிரக் கணக்கில திரண்டு வந்து, போராட்டமெல்லாம் நடத்தினவை. இதைவிட வெளிநாடுகளில இருக்கிற கனபேர், அர்ச்சுனா வழக்கு நடத்துறதுக்காக காசு சேர்த்தும் அனுப்பினவை.

அப்பிடிப்பட்ட அர்ச்சுனாதான் இப்ப தன்ர எல்லா 'ரெக்கோர்டிங்' அஸ்திரங்களும் அம்போ எண்டு கைவிட்டதால, கம்பி எண்ணிக்கொண்டிருக்கிறார். முந்தநாள் சாவகச்சேரி கோர்ட்டில பார்த்த அர்ச்சுனாவை எல்லாரும், 'இவரோ அப்பிடி சண்டைக்கார சேவல் மாதிரி சவாலெல்லாம் விட்டு வீடியோ போட்டவர்?' எண்டு ஒருக்கா சொக் ஆகியிருப்பினம். அந்தளவுக்கு பவ்வியமும் , குழைவுமா ஆள் பதில் சொல்லி 'நான் ஏதும் தெரியாமல் உங்களைப் பற்றியும் (நீதிபதியைப் பற்றி) சொல்லியிருந்தால் மன்னிச்சுக்கொள்ளுங்கோ' எண்டு கெஞ்சியிருக்கிறார். ஆனாலும் நீதிபதி விடேலை.

'டாக்குத்தர்மாரில நீங்கள் சுமத்தின குற்றச் சாட்டுகளுக்கு ஏதும் ஆதாரம் இருக்கோ? ' எண்டு நீதிபதி கேக்க, 'டொக்டர் வாசுதேவா எனக்கு போனில சொன்ன ரெக்கோடிங் தான் ஆதாரம்' எண்டு நெஞ்சை நிமிர்த்தியிருக்கிறார் அர்ச்சுனா. ஆனால் 'அப்படி அவர் பேர்சனலா கதைச்சதெல்லாம் ஆதாரமா எடுக்கேலாது வேற ஏதும் ஆதாரம் இருக்கோ?' எண்டு நீதிபதி சொல்ல அர்ச்சுனா வெலவெலத்துப் போட்டார். பிறகு ஒருமாதிரிச் சமாளிச்சுக் கொண்டு 'ஆதாரம் இருக்கு. ஆனால் நீங்களும் லோயர்ஸும் சேர்ந்து உந்த டொக்டர்மாரோட கிரிக்கெட் விளையாடினீங்கள். அதால உங்களிட்ட ஆதாரங்களைத் தர ஏலாது' எண்டு நீதிபதியையே குற்றம் சாட்டுறமாதிரி தன்ர பேஸ்புக் லைவ் எண்ட நினைப்பில அர்ச்சுனா கண்டபடி உளறத் தொடங்கிட்டார். ஆதாரமில்லாமல் வாய்க்கு வந்ததைப் புசத்திப் போட்டு, பிணையாளியளோடையும், தன்ர லோய ரோடையும் கொழுவல் எடுத்தால் என்னெண்டு அவரை வெளில விட முடியும்? அதால ஆளுக்கு மறியல் எண்டு நீதிபதி சொல்ல, அர்ச்சுனாவை கூட்டிக் கொண்டு போக பொலிஸ் ரெடியா வர, திடீரெண்டு அர்ச்சுனா ஏதோ சொல்லப்போற மாதிரி கையை உயர்த்தி இருக்கிறார்.

'சரி, ஏதோ மன்னிப்புக் கேக்கப்போறாராக்கும்' எண்டு எல்லாரும் எதிர்பார்க்க, நீதிபதியைப் பார்த்து, 'நான் இதை ஹைகோர்ட்ல பார்க்கிறன். எப்பிடி வெளில வரவேணும் எண்டு எனக்குத் தெரியும்' எண்டு அதே பழைய குறளி வித்தையையும் அர்ச்சுனா காட்டத்தவறேலையாம். உந்தாளை எத்தினைமறியலில போட்டாலும் திருந்துறதுக்கு சான்ஸே இல்லைப்போல.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 28

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்று பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ச-17)

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 27

தேசிய நல்லிணக்க மன்றத்தின் ஒழுங்குபடுத்தலில் வடக்கு தெற்குக்கான உறவுப்பாலம் என்ற நிகழ்வு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

தமிழ் மாணவர்களுக்கும் சிங்கள மாணவர்களுக்கும் இடையில் பரஸ்பரத்தை ஏற்படுத்தும் நோக்கில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் தேசிய நல்லிணக்கமன்றத்தின் செயலாளர் திருமதி பிரியதர்ஷினி மற்றும் உபதலைவர் தமிழ்ச்செல்வன் தலைமையில் கிளிநொச்சி பசுமைபூங்காவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ம-25,113)



# துப்புரவுப் பணி

யாழ்ப்பாணம், செப்.28

யாழ். இந்துக் கல்லூரி சாரணர்களால் வேலணைப் பிரதேச சபையினரின் ஒத்துழைப்புடன் வேலணை சாட்டிக் கடற்கரையில் துப்புரவுப் பணி கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ச-45

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பணப்புழக்கம் இருந்தாலும் திடீர் செலவுகளால் கையிருப்பு குறையக்கூடும். காரியம் இழுபறியாகி முடியும். விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும். செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறன் அதிகரிக்கும். பிடிவாதப் போக்கு மாறும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வீண் செலவுகள் ஏற்படும். முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவைப்படுகிறது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** உற்சாகத்துடன் செயற்படும் நாள். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிரச்சினைகள் நீங்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. அலைச்சல் ஏற்படும். பண உதவி கிடைக்கும். பொறுமையுடன் செயற்படவும்.

**தனுசு:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். பாதிப்பு இருக்காது. வியாபாரத்தில் எதிர்பாராத செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். காரியம் அனுகூலமாக முடியும். செலவுகள் அதிகரிக்கும். உறவுகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். பாதிப்பு எதுவும் இருக்காது. வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். அம்பிகையை வழிபடுவது நன்று.

**மீனம்:** பணவரவு உண்டு என்றாலும் சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும் சற்று சோர்வு உண்டாகும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

# பண்டிநெல் களை கட்டுப்படுத்துங்கள்

யாழ்ப்பாணம், செப். 28

இம்முறை பெரும்போக நெற்செய்கையில் பண்டிநெல் என்ற களையைக் கட்டுப்படுத்துவதற்கு நெற்செய்கையாளர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பண்டிநெல் களையால் நெற்பயிர்களின் பெருக்கம் குறைவடைவதோடு விளைச்சலும் பாதிக்கப்படும்.

களையை முன்கூட்டியே கட்டுப்படுத்துவதற்கும் அதற்கான ஆலோசனைகளை வழங்கவும் விவசாயத் திணைக்களம் உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது என்றும் யாழ்.மாவட்ட விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-17)

# கூடைப்பந்து விழா

யாழ்ப்பாணம், செப்.28

உலக பக்கவாத தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வாக வடக்கு மாகாண ஸ்பட்னிக் விளையாட்டுக் கழகம் நடத்தும் மகளிர் கூடைப்பந்து விழா யாழ். பழைய பூங்கா விளையாட்டு அரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உயிர்வேதியியல் துறையின் மூத்த பேராசிரியர் வசந்தி அரசரத்னம் பிரதம விருந்தினராகவும், மகளிர் விவகார அமைச்சு செயலாளர் பி.வாகேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி)

# தேசிய வாசிப்பு மாத போட்டிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.28

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் கீழ் இயங்கும் மானிப்பாய், ஆனைக்கோட்டை, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய பொது நூலகங்களில் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய வாசிப்பு மாதப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே' எனும் தொனிப்பொருளில், வாசகர் மற்றும் மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு தரம் 1-3, தரம் 4-5, தரம் 6-8, தரம் 9-11, தரம் 12-13, வரையான பகுதிகளில் வாசிப்பு, திருக்குறள் மனனப் போட்டி, கட்டுரை, பேச்சு, கவிதை, சித்திரம் வரைதல், பொது அறிவு, துண்டுப்பிரசுர வெளியீடு, புதிய நூல்களின் கண்காட்சி மற்றும் சிறார்களுக்கான பொழுதுபோக்கு நிகழ்வு போன்றனவும், முன்பள்ளி மாணவர்களுக்கு கதைகூறல், நிறம் தீட்டுதல், எண்கள் மற்றும் எழுத்துகளை இணைத்தல் போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொண்டு தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்துமாறு மானிப்பாய் பிரதேசசபையின் நூலக வாசகர் வட்டத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி)

# சனீஸ்வர தோச நிவர்த்தி வழிபாடு

கிளிநொச்சி, செப். 28

பளை, இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவிலில் சனீஸ்வர தோச நிவர்த்தி வழிபாடு இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

ஏழரைச் சனி மற்றும் அட்டமத்துச்சனி தோஷமுள்ளவர்கள் ஹோமத்தில் கலந்துகொள்ளுமாறு கோவில் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-9)

# விருது வழங்கல்

யாழ்ப்பாணம், செப்.28

சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் சமய சமூகப் பணியைப் பாராட்டி சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக் குருக்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சொற்பொழிவு ஆற்றும் குழுவினரால் 'ஆகமக் கிரியா சமூக சிரோண்மணி' எனும் விருதும், சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய நிர்வாகத்தினரால் 'திருமுருக உபாச ஞானி' எனும் விருதும் வழங்கி வைக்கப்படவுள்ளன. (ரி)

# தவறான முடிவெடுத்து பெண் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மறுசீரமைப்பும் புத்துருவாக்கமும்

தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதையடுத்து அமைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசாங்கம், நாட்டில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றது. பாரபட்சமற்ற ஆளுநர் நியமனங்கள், வாகனங்கள் பறிமுதல், ஜனாதிபதிக்கான பாதுகாப்புக் குறைப்பு, பாடசாலை நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு அரசியல்வாதிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளமை, நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களின் பங்கேற்பு என்றவாறாக இந்தப் பட்டியல் நீட்சிபெறுகின்றது. இன்னொரு கருத்துக்கு இடமின்றி முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள வேண்டியதும் வரவேற்க வேண்டியதுமான விடயங்கள் இவை. ஆனால், ஜனாதிபதி அநுரகுமார சாத்தியப்படுத்தப்பட வேண்டிய மறுசீரமைப்புகள் இவை மட்டும்தானா? என்ற கேள்வியும் இங்கெழுவது தவிர்க்க முடியாததே. சீர்திருத்தங்களுக்கு எவ்வளவுதூரம் முக்கியத்துவம் கொடுக்கின்றாரோ, அவ்வளவுதூரம் புத்துருவாக்கத்துக்கும் ஜனாதிபதி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனெனில், சுதந்திர இலங்கையில் இதுவரை நிறைவேற்றப்படாத கடமைகளுக்கும், கண்டுகொள்ளப்படாத விடயங்களுக்கும் பஞ்சமே இல்லை. அந்தத் சாபக்கேட்டை அடியோடு எரித்தழிக்க வேண்டிய பொறுப்பும் ஜனாதிபதி அநுரவுக்கே உண்டு.

இலங்கை சுதந்திரமடைந்து ஏழு தசாப்தங்கள் முற்றாக முடிவடைந்த போதிலும், ஆதிவாசிகள் இன்னமும் தங்களுக்கென்றொரு அடையாளத்தைக் கண்டுகொண்டதாகவில்லை. நாட்டில் உள்ள ஆதிவாசிகளின் கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற அவர்களின் குறைந்தபட்சக் கோரிக்கைகள்கூட மெய்ப்படவில்லை. அத்துடன், சிறப்புத் தேவையுடையவர்கள் அரச திணைக்களங்களிலும், தனியார் நிறுவனங்களிலும், பொதுப்போக்குவரத்துகளிலும் மிகச்சிரமப்பட வேண்டியிருக்கின்றது. உண்மையில் இதுவொரு இழிநிலை. இந்தக் கலாசாரம் மாற்றம்பெற வேண்டுமாயின், இவர்களுக்கென தனியான அமைச்சுகள் உருவாக்கப்பட வேண்டும். மேற்கத்தேய நாடுகளில், ஆதிவாசிகள் தங்களின் உரிமைகளுக்காக தற்துணிவாகப் போராடுகின்றனர். நாட்டின் போக்கைத் தீர்மானிக்கக்கூடியவர்களாக சிறப்புத் தேவையுடையவர்கள் உள்ளனர். இதற்கெல்லாம் காரணம், அங்கு அவர்களுக்கான அரசியலும் 'வசதிகளும்' வாய்ப்புகளும் உறுதிப்படுத்தப்படுகின்றமைதான். ஆதிவாசிகள், பூர்வகுடிகள் மற்றும் சிறப்புத் தேவையுடையவர்களுக்காக அங்கு தனித்தனி அமைச்சுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் அமைச்சர்களாகவும் அந்தச் சமூகத்தின் பிரதிநிதிகளே உள்ளனர். அவர்கள் தாம் சார்ந்த சமூகத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

இந்த முறைமை இலங்கையில் பின்பற்றப்பட வேண்டும். ஆதிவாசிகளுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் நாடாளுமன்றத்தில் கட்டாயப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். ஆதிவாசிகள் மற்றும் சிறப்புத் தேவையுடையவர்களுக்கு நாடாளுமன்றத்தில் தலா ஓர் ஆசனம் வழங்கப்பட வேண்டும். அவர்களின் குரல் நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலிக்க வேண்டும். இரண்டு தசாப்தத்தின் பின்னர் பெண் பிரதமரை உருவாக்குவதில் பெருவிருப்பம் கொண்டிருந்த ஜனாதிபதி அநுர, தன் சிந்தனையையும் செயற்பாடுகளையும் விரிவாக்கும் பட்சத்தில் இவையெல்லாம் இலங்கையிலும் சாத்தியமே. பெண்ணுரிமைக்காக குரல் கொடுப்பதும், தொழிலாளர் சுதந்திரத்துக்காக குரல் கொடுப்பதும் எவ்வளவு முக்கியமோ அவற்றுக்கு நிகராகச் செய்யப்பட வேண்டிய இந்த மாற்றங்களில் தேசிய மக்கள் சக்தி அற்புதங்களை நிகழ்த்தும் பட்சத்தில் அதுவே உண்மையான திருப்பமாக அமையும். சீர்திருத்தம், புத்துருவாக்கம் என்பன ஒரு வண்டியில் பிணைக்கப்பட்ட இரு மாடுகள். சமச்சீராக ஓடட்டும்.




# அரச சொகுசு பங்களாக்களை மீள ஒப்படைக்க காலக்கெடு

பொது நிர்வாக அமைச்சு அறிவுறுத்து

**கொழும்பு, செப். 28**

**முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் அந்தந்த அமைச்சுப் பதவிகளை வகித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்திய அனைத்து அரசாங்க வீடு மற்றும் பங்களாக்களை உடனடியாக மீள ஒப்படைக்குமாறு பொது நிர்வாக அமைச்சு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.**

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் சுமார் 15 பேருக்கு அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பங்களாக்களை ஒப்படைப்பது தொடர்பில் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்னாள் அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் சில நிறுவனங்களுக்கு அரசாங்கம் 50 கொழும்பு அரச பங்களாக்களை வழங்கியிருந்தது. இந்த நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும் தினத்தில் அல்லது அதற்கு அடுத்த தினத்தில் குறித்த உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்கவேண்டும் என நாடாளுமன்ற அதிகாரிகள், முன்னாள் அமைச்சர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். (ச-சி)

## வட்டி விகிதங்கள் மாற்றமில்லை!


கொழும்பு, செப். 28

கொள்கை வட்டி விகிதங்களை மாற்றமின்றித் தொடர்ந்தும் ஒரே மட்டத்தில் பேண இலங்கை மத்தியவங்கி தீர்மானித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நாணயசபை மீளாய்வுக் கூட்டத்தின் போது, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய துணை நில் வைப்பு வசதி விகிதம் 8.25 சதவீதமாகத் தொடர்ந்தும் பேணப்படவுள்ளது. அத்துடன், துணைநில் கடன் வசதி விகிதம் 9.25 சதவீதமாக மாற்றமின்றிப் பேணப்படவுள்ளதாக இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது. (ச)

## பெற்றோலியக் கூட்டுத்தாபன புதிய தலைவர் டி.ஏ.ராஜகருணா

கொழும்பு, செப். 28

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக டி.ஏ. ராஜகருணா நியமிக்கப்பட்டுள்ளார். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக முன்னர் செயற்பட்ட சாலிய விக்ரமசூரிய நேற்றுமுன்தினம் பதவி விலகியிருந்தார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



## கோழி இறைச்சி விலை குறையும்

கொழும்பு, செப். 28

கோழி இறைச்சிக்கான தேவை வெகுவாகக் குறைந்துள்ளதாகவும், இதன் காரணமாக அடுத்த இரண்டு வாரங்களில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 100-150 ரூபா வரை குறையலாம் எனவும் அகில இலங்கை சிறு கைத்தொழில் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது ஒரு கிலோ கோழி இறைச்சியின் சில்லறை விலை 1,000 முதல் 1,100 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது. அடுத்த பதினைந்து நாள்களில் இந்த விலை 900 முதல் 850 ரூபா வரை குறையலாம் என்றும் அதன் தலைவர் தெரிவித்தார். (ச)

## டெங்கு 38,874



கொழும்பு, செப். 28

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 38,874 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என்றும் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

**நாளை**

29.09.2024

ஞாயிற்றுக்கிழமை - புரட்டாதி - 13

சுபநேரம் : 09.02 - 10.32

ராகுகாலம் : 04.32 - 06.02

**நாளொரு நல்வார்த்தை**

**பகலவன் மறைந்ததற்காக அழுதால் நட்சத்திரங்களைக் காண முடியாது.**

- தாகூர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிப்படைத் தன்மைக்காக அநுரவுக்கு கொரியா ஆதரவு

அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய செயற்றிட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று கொரிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியபோதே, அரசாங்கத்தின் செயற்றிட்டங்களுக்கான தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் ஊழல், மோசடி ஒழிப்பு செயற்றிட்டங்களுக்கு நிதியுதவி வழங்கவும், இலங்கைக்குத் தேவையின் அடிப்படையில் கடன்களை வழங்கவும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் இந்தச் சந்திப்பின்போது இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பணிகளில் கொரியாவும் மிக முக்கியமான பங்களிப்பை வழங்கியிருந்த நிலையில், தற்போது கொரியாவால் புதிய ஜனாதிபதிக்கும் இடைக்கால அரசாங்கத்துக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆதரவு நல்லதொரு விடயமாகப் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

**வெல்டிங் உபகரணங்கள் விற்பனைக்கு**

வெல்டிங் தொழிற்சாலைக்கு தேவையான அனைத்து உபகரணங்களும் உடன் விற்பனைக்கு. ஒரு தொழிற்சாலைக்கு தேவையான எல்லாமும் உள்ளன.

தொடர்பு: 076 942 9254

**வேலையாட்கள் தேவை**

நாவலர் வீதியில் இயங்கிவரும் சுப்பர் மார்க்கெற் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. Computer Billing + Cashier
2. Sales Assistant (உதவியாளர்)
3. Driver (வாகன சாரதி)

யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

(CS 1456) A-1

விபரங்களுக்கு: 077 4195 209

## ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 17 வேலப்பர் வீட்டு 1ம் ஒழுங்கை, 25 எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வேலு இளையதம்பி இராசையா என ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இதன் பின் 1ம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனமானது இலக்கம் 3, ஸ்ரான்லி கல்லூரி வீதியைச் சேர்ந்தவர்களான முத்து சுப்பையாவும் பெண் சிவபாக்கியமும் பிரசித்த நொத்தாரிசு கே.எம். இராதாகிருஸ்ணன் முகதாவில் 2008.03.30 ல் 333ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 அளவுகொண்ட ஆதனத்தை 1978 ம் ஆண்டு மாசி மாதமளவில் இளையதம்பி இராசையா என்பவரிடம் இருந்து கொள்வனவு செய்து அபிவிருத்தி வேலைகள் மேற்கொண்டும், கல்வீடு கட்டி வசித்தும் இன்றைவரை தங்குதடையின்றி ஆட்சி செய்தும் வருவதாக வெளிப்படுத்தியுள்ளனர்.

மேலும் இவ்வாதனம் தொடர்பான உறுதிகள் நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக தொலைந்து விட்டன என்றும் இதுபற்றி பல வழிகளில் தேடுதல் செய்தும் கிடைக்கப்பெறவில்லை எனவும் இவ்வாதனத்தை 1978ம் ஆண்டில் இருந்து இன்றுவரை எவ்வித தங்குதடையுமின்றி எவரது தலையீடும் குழப்பமும் இன்றியும் இன்னும் எவருக்கேனும் வாடகையோ, பயன்களோ செலுத்தாமலும் சேவை எதுவும் செய்யாமலும் எவரது உரித்தையும் அங்கீகரிக்காது எதிர்உரித்தாகவும் உடமை கொண்டு ஆட்சி செய்து வருகின்றோம் எனவும் தெரிவித்து எமக்குரிய ஆதனம் என வெளிப்படுத்தியுள்ளனர்.

குறித்த முத்து சுப்பையாவும் பெண் சிவபாக்கியமும் பிரசித்த நொத்தாரிசு கே.எம் இராதாகிருஸ்ணன் முகதாவில் 2008.06.18ல் 340ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 அளவு கொண்ட அதே ஆதனத்தை தமது மகள் சுப்பையா கவிதா என்பவருக்கு தமது சீவிய நலவுரித்திற்கமைவாக நன்கொடையளித்துள்ளனர்

இதன்பின் 2ம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனமானது இலக்கம் 221, கண்டி வீதியில் வசிக்கும் இளையதம்பி இரசையா என்பவர் பிரசித்த நொத்தாரிசு பிறின்ஸ் செல்லப்பா இராசக்கோன் முகதாவில் 24.12.1979ல் 179ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதியில் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 1/4 இனை தனது மகன் இராசையா பாஸ்கரன் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார்.

இலக்கம் 221, கண்டி வீதியைச் சேர்ந்தவரும் தற்சமயம் ஜேர்மனியில் வசிப்பவருமான இராசையா பாஸ்கரன் என்பவர் இதன்பின் 2ம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனத்தை தனது அற்றோனித் தத்துவக்காரர் செல்லத்துரை அருளானந்தம் மூலம் பிரசித்த நொத்தாரிசு கே.எம்.இராதாகிருஸ்ணன் முகதாவில் 18.06.2008ல் 342ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மேற்குறித்த ஆதனத்தில் விஸ்தீரணம் நிலப்பரப்பு குளி 0.6 அளவுடைய ஆதனத்தை பாதைக்காக சுப்பையா கவிதா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை 1**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளி கோவிற்பற்று சீவியா தெரு இறை "பட்டன் கட்டி வளவும் பத்தினி வளவும் புளியடி வளவும்"நிலப்பரப்பு 1 ம் வீடும் வான்பயிர் செய்பயிர்களும் இது நில அளவையாளர் பி.தவராஜா அவர்களால் 2007ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2048ம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என சுட்டப்பட்ட பாகமாகும். இந்த நிலப்பரப்பு 1 ற்கும் எல்லைகள் :

கிழக்கு -இராசையா பாஸ்கரனின் ஆதனமும் ஒன்பது அடி அகலப்பாதை நிலமும்

வடக்கு - ஒழுங்கை

மேற்கு மருதவாணன் பெண் நகுலேஸ்வரியின் ஆதனம்

தெற்கு - செல்லத்துரை பெண் சிவசோதியின் ஆதனமும் இதடாங்களும்

இன்னும் தென்கிழக்கேயுள்ள கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும் வாய்க்கால் வழிப் பாவிப்புரித்தும் இன்னும் வடக்கு எல்லை ஓரமாக கிழக்கு பக்கமாயுள்ள ஒன்பது அடி (9) அகல பாதை நிலத்தால் சென்று ஸ்ரான்லி கல்லூரி வீதியை சென்றடையலாம்.

**ஆதன அட்டவணை 2**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளி கோவிற்பற்று சீவியா தெரு இறை "பட்டன் கட்டி வளவும் பத்தினி வளவும் புளியடி வளவும்"நிலப்பரப்பு இரண்டே கால்(2 1/4) ஆனால் நில அளவையாளர் பி.தவராசா அவர்களால் 18.11.2007 அன்று அளந்து வரைந்த 2948 ம் இலக்கப்படத்தின் படி நிலப்பரப்பு இரண்டு குளி மூன்று (நி.ப.2 குளி3) இதில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு சைபர் குளி ஆறும் (நி.ப.0 குளி6) இது மேற்படி இலக்கப்படத்தில் துண்டு 2 என சுட்டப்பட்டுள்ளது.

எல்லைகள்-

கிழக்கு - ஸ்ரான்லி கல்லூரி வீதி

மேற்கு - சுப்பையா கவிதாவின் ஆதனம்

வடக்கு - ஒழுங்கை

தெற்கு - சுப்பையா கங்காதேவியின் ஆதனமும் இதனடாங்கலும்

இன்னும் தெற்கேயுள்ள கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் வடக்கு எல்லை ஓரமாக ஒன்பது அடி(9') பாதை நிலத்தினூடாக மேற்கு எல்லை ஆதனக்காரியான சுப்பையா கவிதா சென்று ஸ்ரான்லி கல்லூரி வீதியைச் சென்றடையலாம்.

தற்போது ஆதன அட்டவணை 1ல் விபரிக்கப்பட்ட நிலப்பரப்பு 1 விஸ்தீரண அளவு கொண்ட ஆதனத்தையும் ஆதன அட்டவணை 2ல் விபரிக்கப்பட்ட நிலப்பரப்பு 00 குளி 6 அளவு கொண்ட பாதை நிலப்பரப்பையும் சேர்த்த ஆதனமான நிலப்பரப்பு 1 குளி 06 அளவுகொண்ட ஆதனத்தை சுப்பையா கவிதா என்பவர் தனது பெயருக்கு எமது ஆதன வரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுப்பையா கவிதா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 25 முஸ்லிம் கல்லூரி வீதி, ஆதன இல 27, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் என். எம். காவது பெண் உம்மா குலது என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை தெற்கு, நாவாந்துறை பள்ளுவிலித்தோட்டம் இறையில் மொகமட் யூசுப் பஜே லாபிர் உம், மொகமட் யூசுப் ஜசிந்தாவும், மொகமட் யூசுப், ஜிப்லாஸ் உம், மொகமட் யூசுப் றமீஷ் உம், மொகமட் யூசுப் யௌசாத் உம், மொகமட் யூசுப் றினோசாவும் 25.08.2010ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம்.எம்.எம். ரமீஸ் முகதாவில் 1987ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் மொகமட் யூசுப் ஜப்ரீன் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தெற்கு இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட "பள்ளுவிலித்தோட்டம்" உத்தர்வு பெற்ற நில அளவையாளர் எஸ். சுப்பிரமணியம் அவர்களால் 07.08.2010ம் திகதி அளந்து விபரித்த 1533 இலக்க படத்தின்படி துண்டு 1 என குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 01 கட்டடமும் பயிர்வகைகளும்.

இதற்கு எல்லைகள்:-

கிழக்கு: முஸ்லிம் கல்லூரி வீதி.

வடக்கு: விஜயராஜா புத்ர்சினியின் ஆதனம். (Vijayarajah Putharshini)

மேற்கு: உம்முகுல்தூம் பெண் கௌது. (Ummukulthoom wife of Howdu)

தெற்கு: வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் ஆதனம்.

இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை மொகமட் யூசுப் ஜப்ரீன் என்பவர் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது, மொகமட் யூசுப் ஜப்ரீன் என்பவரின் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR/43293) J-1

## மரண அறிவித்தல்

மலர்வு 14 . 06 . 1934



உதிர்வு 25 . 09 . 2024

### குமாரலிங்கம் சரஸ்வதி அம்மாள்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ் நீர்வேலி, சாவகச்சேரி நுணாவில் மேற்கு மற்றும் கொழும்பினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.குமாரலிங்கம் சரஸ்வதி 2024.09.25 ஆம் திகதி, புதன்கிழமை அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்மா- அருளையா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா- பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற செல்லையா குமாரலிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பக்தவத்சலன், ரதசேகரம் மற்றும் லோகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற குமாரசாமி, குமாரசிவம் மற்றும் செல்வமணி ஆகியோரின் மைத்துனியும், இதயகுமார், காலஞ்சென்ற ரஞ்சகுமார், பிறேமகுமார், சுபித்தா மற்றும் யசோதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிறேமா, நிரோஷனா, சுரேஸ்குமார் மற்றும் சண்டேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், ரதூஷன், அஸ்மிதா, அபிநயா, ஆதீஷ் மற்றும் ஜசாயினி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், சஹானா மற்றும் பிரதீஷ் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலானது கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் 2024.09.29 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.30 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நண்பகல் 12.00 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: மகன் - பிறேமகுமார்
077 654 0410

(CS/1450) J-1

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## யாழ். பல்கலையில்
# தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.28

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது தியாகதீபத்தின் திருவுருவப் படத்துக்கு ஈகைச் சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையா ளர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-27)








# பிரிட்டன் நாடாளுமன்ற முன்றலில் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப்.28

தியாகதீபம் திலீபன் உயிர்த் தியாகம் செய்த 37 ஆவது ஆண்டு நினைவு நாளை நினைவுகொள்ளும் முகமாக பிரித்தானிய நாடாளுமன்ற முன்றலில் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

பிரித்தானியாவில் வாழும் ஈழத்தமிழர்கள் ஒன்றிணைந்து 37ஆவது ஆண்டு நினைவுநாளை உணர்வெழுச்சியுடன் கடைப்பிடித்தனர். (ரி-27)

# தமிழீழம் நிச்சயம் ஒருநாள் மலரும்

## திலீபன் நினைவேந்தலில் முதியவர் உருக்கம்

யாழ்ப்பாணம், செப். 28

திலீபன் ஒரு மகான். திலீபனின் இலட்சியம், தமிழ்மக்களின் நலன்களுக்காக அவர் கொள்கையில் இறுதிவரை கொண்ட உறுதிப்பாடு ஒருபோதும் வீண் போகாது. தமிழீழம் நிச்சயம் ஒருநாள் மலரும் என்று திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட 80 வயதான முதியவரொருவர் தெரிவித்துள்ளார்.


பன்னிரண்டு தினங்கள் நீராகாரம் கூட இன்றி அகிம்சை வழியில் உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்த தியாகதீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாள் நேற்றுமுன்தினம் நல்லூரில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது சாவகச்சேரியைச் சேர்ந்த 80 வயதான முதியவரொருவர் நீண்டநேரம் திலீபனின் நினைவுத்தூபியைப் பார்த்து திலீபனின் தியாகத்தை எண்ணி மனமுருகிக் கண்ணீர் சிந்தினார். தியாகதீபம் திலீபன் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் பன்னிரண்டு தினங்கள் அகிம்சைவழியில் உண்ணாநோன்பிருந்தபோது பத்தாவது நாளில் தான் கலந்து கொண்டதாகவும், அப்போது அவரது உடல் மிகவும் சோர்வான நிலையில் காணப்பட்டபோதும் கொண்ட கொள்கையில் திலீபன் உறுதியாகவிருந்ததாகவும் அவர் கண்ணீருடன் கூறினார். (ச-66)

# விண்ணப்பம் கோரல்


யாழ்ப்பாணம், செப்.28


வலிகாமம் மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவையும் பிரதேசசெயலகமும் இணைந்து நடத்தும் 2024 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டு விழாவில் இளம் கலைஞர்களைக் கௌரவிக்கும் நோக்கில் இளம் கலைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சங்கானைப் பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்ட 30 வயது தொடக்கம் 45 வயதுக்குட்பட்ட இளம் கலைஞர்கள் தமது விண்ணப்பத்தை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று எதிர்வரும் 3 ஆம்திகதிவியாழக்கிழமைக்கு முன்னர் உரிய ஆவணங்களுடன் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (ச-45)






தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை சிவன் கோயில் முன்றலில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-45)





# மன்னாரிலிருந்து அநுரவுக்கு தபாலட்டை அனுப்பும் போராட்டம்

மன்னார், செப். 28

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின்சாரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுச் செயற்பாடுகளை நிறுத்தக் கோரி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் தபால் அட்டை மூலம் கோரிக்கைகள் முன்வைக்கும் நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- மல்லாகம் உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் :- திரு. பொன்னையா கனகசபை
விண்ணப்பதாரர் பெயர் :- திரு. பொன்னையா கனகசபை
முகவரி :- கும்பிளாவளைப்பிள்ளையார் கோவில் வீதி, அளவெட்டி மத்தி, அளவெட்டி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 12, கும்பிளாவளைப் பிள்ளையார் கோவில் வீதியில் ஆதன இல. 45 மற்றும் ஆதன இல. 45/1 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை "தாதரவை" என்ற ஆதனம் முறையே (ஆதன இல.45) - உரிமைகோருபவர் பொன்னுத்துரை மங்களேஸ்வரன், (ஆதன இல. 45/1) - உரிமை கோருபவர் பொன்னையா கனகசபை என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 28.05.2024 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிஸ் சிவராணி ரத்தினம் கெங்காதரன் அவர்கள் முகதாவில் இலக்கம் 17209 இல் அத்தாட்சிப்படுத்திய வெளிப்படுத்தல் உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
குறித்த ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு சு. நடராஜா முகதாவில் 13.09.1981 ம் திகதியில் 2880ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் "தாதரவை" எனும் ஆதனத்தின் நிலப்பரப்பு 18 குளி 7 இல் சொரியலில் 3/16 பங்கு விண்ணப்பதாரரை வந்தடைந்துள்ளது. மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் T. பாலசுப்பிரமணியம் அவர்களால் அளந்து வரைந்த 2119 இலக்க 07.04.2024 திகதிய நில அளவைப்படத்தில் துண்டு - 1 எனச் சுட்டிய பாகம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு சிவராணி ரத்தினம் கெங்காதரன் முகதாவில் 28.05.2024ம் திகதியில் 17209 இலக்க வெளிப்படுத்தல் உறுதிப்படுத்தல் சாதனம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் 17209ம் இலக்க வெளிப் படுத்தல் உறுதியில் குறித்த ஆதனம் நிந்தமாக தன்னால் 40 வருடங்களுக்கு மேலாக ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது என்பதனையும் குறித்த ஆதனப் பர்கம் வேறு எவரேனும் ஆட்களால் ஆட்சி செய்யப்படவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "தாதரவை" நிலப்பரப்பு பதினெட்டு குளி ஆறேமுக்கால் (நிலப்பரப்பு 18 குளி 6 3/4) வீடு மற்றும் கிணறும் இதற்கு எல்லைகள்
கிழக்கு :- சுப்பிரமணியம் பெண் திலகவதி மற்றும் சோமசுந்தரத்தின் வாரிசுகள்
வடக்கு :- கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில் ஒழுங்கை
மேற்கு :- ஒழுங்கை
தெற்கு :- ஒழுங்கை
மேலே சொல்லப்பட்ட ஆதனம் மீள நில அளவை செய்யப்பட்டு பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம், கிராமசேவையாளர் அளவெட்டி மத்தி, J/216 மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "தாதரவை" எனும் ஆதனம் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் T. பாலசுப்பிரமணியம் அவர்களால் 07.04.2024 ஆந் திகதிய 2119ஆம் இலக்க
01 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு இரண்டு குளி ஒன்று (நிலப்பரப்பு 2 குளி 1)

இதற்கு எல்லைகள்
கிழக்கு :- பாதை மற்றும் துண்டு 2 தூர்வையும் கிணறு
வடக்கு :- வீதி
மேற்கு :- ஒழுங்கை
தெற்கு :- துண்டு 2 மற்றும் சிவராஜசுந்தரம் பெண் தங்கேஸ்வரி

மேற்குறித்த ஆதனத்தை பொன்னையா கனகசபை என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக, ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த, முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் பொன்னையா கனகசபை பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்
செயலாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

(CS/56306) J-1

# நிலந்தவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கொழும்பு, செப். 28
ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பில் 75 மில்லியன் ரூபாவை முழுமையாகச் செலுத்தத் தவறிய அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்த்தனவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.
அதன்படி, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான 7 பேர் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி நிலந்த ஜயவர்த்தனவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளது. (ச)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு Champian Lane
நந்தாவிலில் புத்தம் புதிய வீடு விற்பனைக்கு.
- 2. 3/4 பரப்பு
- 4 அறைகள், 2 குளியலறைகள்
- சுற்று மதில்
- காணி பிரிக்கக்கூடிய நிலையில் உள்ளது.
- கட்டுக்கிணறும் உண்டு.

தொடர்பு:- 076 620 7597

(CS/1403) J-1

## நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் சகல துறைசார்ந்த, அரசாங்க வேலை, தனியார் கம்பனி, உள்நாடு வெளிநாட்டு மணமக்களும் ஏராளம் உண்டு. நீங்கள் விரும்பியவாறு மணமகனோ மணமகளோ எதுவென்றாலும் துரிதமாகவும் துல்லியமாகவும் தெரிவு செய்து தரப்படும்.

தொடர்பு: வி.ஜெயந்தி
077 9733 183

## கூட்டம்

ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆலய மண்டபத்தில் பரிபாலன சபையின் தலைவர் நா.இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச–66)

# நினைவஞ்சலிகள்

## இரண்டாம் ஆண்டு

தோற்றம்
03
•
04
•
1944



மறைவு
21
•
09
•
2022

ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளை ஒவசியர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் இராசரத்தினம் சின்னத்தங்கம்

அவர்களின் 2ம் ஆண்டு நினைவஞ்சலி
எங்கள் தாயே !!! ஆறாது ஆறாது
அழுதாலும் தீராது எம் தாயே !!!
ஆண்டுகள் இரண்டு கரைந்ததுவே
இனிய தாயாக இல்லத்தில் வாழ்ந்தீர்கள்
அம்மா ஆயிரம் நிலவுகள் வாழ்வில்
வந்து மறைந்தாலும் ஒற்றைச் சூரியனாய்
பிரகாசித்தீர்கள் அம்மா உங்களது அன்பும்,
நாங்கள் பட்ட தவிப்பும் ஆறாது அம்மா
இறுதிவரை சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம் !!!
இது தான் சொர்க்கம் என்றிருந்தோம்!!!
இமைப்பொழுதில் காலன் உம்மைக்
கவர்ந்து விட்டான் இக்கணமும் உங்கள்
நினைவால் கலங்குகின்றோம் அம்மா
ஆண்டுக் நூறு கடந்தால் என்ன
அடுத்தடுத்து நாம் வேறு பிறப்பெடுத்தால் என்ன
அன்றும்! இன்றும்! என்றும் மாறாது
உங்கள் அன்பும் பாசமும் எமதுயிர் உள்ளவரை
உங்களுக்காக உங்கள் ஆத்மா
சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

நினைவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
021 296 9205

## 47ஆம் ஆண்டு

தோற்றம்
06
•
04
•
1935



மறைவு
20
•
08
•
1977

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் செல்லத்துரை இராசரத்தினம்

அவர்களின் 47ம் ஆண்டு நினைவஞ்சலி
அன்புத் தந்தையே !!
47ம் ஆண்டு ஆனது அப்பா !!!
அப்பா என்று நாம் அழைக்க
நீங்களில்லாத துயரம்
எங்களுடைய அப்பா என்னவெல்லாம்
செய்தார் என்பது எமக்கு கடைசி
வரைக்கும் உணர்ந்ததில்லை
அப்பாவின் அன்பை விட சிறந்தது
இந்த உலகில் எதுவும் இல்லை !
அது போல அப்பாவை பிரிந்த
வலியை விட கொடியது எதுவும் இல்லை
உங்கள் நினைவால் கலங்குகின்றோம் அப்பா
உங்களுக்காக உங்கள் ஆத்மா
சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

நினைவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோ சாரதி மீது யாழ்.நகரில் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாண நகரப் பகுதியில் முச்சக்கரவண்டிச் சாரதி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான சாரதி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போதிலும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என பாதிக்கப்பட்டவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர் தெரிவித்ததாவது:-

யாழ். போதனா மருத்துவமனை முன்பாக நபர் ஒருவர், அப்ஸ் மூலம், முச்சக்கர வண்டி சேவையை நாடினார்.

அதற்கு அமைவாக நான் அங்கு சென்றேன். அதேநேரம், அங்குள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் நின்ற முச்சக்கர வண்டிச் சாரதி, எனது சேவையை நாடிய நபரை, முச்சக்கர வண்டியில் ஏறவிடாமல் தடுத்தார். ஒரு கட்டத்தில் என் மீது தாக்குதல் நடத்தினார். என் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில், பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுசெய்தேன். முறைப்பாட்டின் பிரகாரம் தாக்குதலாளியை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து, அவர் முன்னாடி விசாரணைகளை மேற்கொண்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர் என்னை பேசினார். தாக்குதலாளிக்கு சார்பாக நடந்து கொண்டார். தாக்குதலாளியும், பெண் பொலிஸ் உத்தியோகத்தர் முன்பாக என்னை வெட்டுவேன் என மிரட்டினார். அதனால் நான் பொலிஸ் நிலையத்தில் இருந்து, வெளியேறி விட்டேன். இது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளேன் - என்றார். (ஒ-20)

# அரச தகவல் திணைக்கள பணிப்பாளர் பதவிவிலகல்

கொழும்பு, செப். 28

அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன நேற்று வெள்ளிக்கிழமை தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். பதவி விலகல் கடிதத்தை ஊடகத்துறை அமைச்சர் விஜித ஹேரத்துக்கு அனுப்பிவைத்துள்ளார். (ச)




# ஐரோப்பிய ஒன்றியக்குழு பதில் செயலருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் யாழ்ப்பாண மாவட்ட பதில் மாவட்டச் செயலரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனை சந்தித்து கலந்துரையாடினர். சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர், யாழ்ப்பாணத்தில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியமைக்காக தெரிவத்தாட்சி அலுவலருக்கும், உத்தியோகத்தர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்ததுடன், தேர்தல் சிறப்பாகவும் சுமுகமாகவும் நடைபெற்றதாகத் தெரிவித்தனர். (ச-27)

# மரண அறிவித்தல்

மலர்வு 15 . 01 . 1958



உதிர்வு 27 . 09 . 2024

**திரு. வைத்திலிங்கம் வரதலிங்கம்**
**(ஆயுர் வேத வைத்தியர்)**

யாழ் அளவெட்டி கிழக்கு கணேஸ்வரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வைத்திலிங்கம் வரதலிங்கம் அவர்கள் நேற்று (27.09.2024) வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சிவசிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவரான கனகரட்ணம் மற்றும் ஸ்ரீதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், ரூபினி வரதலிங்கம் (ஓய்வுபெற்ற பிரதிப்பிரதம செயலாளர், நிர்வாகம், வடமாகாணம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீகாந்தன், ஞானலிங்கம், செல்வராணி மற்றும் தியாகலிங்கம் (லண்டன்), கணேசலிங்கம் (கொழும்பு), செல்வமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரோகினி ராதாகிருஷ்ணன் (கொழும்பு), சுபோதினி தயாளன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**மனைவி -ரூபினி வரதலிங்கம்**
**071 874 4288**

(CS 1481) V-1

# இருபதாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 . 06 . 1945



மறைவு 10 . 10 . 2004

**அமரர் சின்னத்தம்பி கராளசிங்கம்**
**(யப்பான்)**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
இருபதாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

25, காரைக்காட்டு லேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு 30 . 10 . 1992



உதிர்வு 26 . 09 . 2024

**திரு.கதிர்காமச்சந்திரன் வினோத்**
**(HNB Assurance - Jaffna நிறைவேற்று அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்)**

மலர்மகள் வீதி, மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.கதிர்காமச்சந்திரன் வினோத் அவர்கள் நேற்று முன்தினம் 26.09.2024 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கதிர்காமச்சந்திரன் - பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும், குணாளினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சமுர்த்தி வங்கி, காரைநகர்-நிரந்தரம், சண்டிலிப்பாய் தற்காலிகம்) அவர்களின் அன்புக் கணவரும், அமரர் குணரட்ணம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், மகிஷாவின் பாசமிகு தந்தையும், அஜித், கிஷான் (CTB புத்தளம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணசாந்தி (ஜேர்மனி), குணசாதிகா, குகதாஸ், நிலுக்சினி (EDCS - கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனரும், சிவசுப்ரமணியம், சிவகஜன் ஆகியோரின் சகலனும், றோசினி, சியானா, அஸ்மிதன், அக்ஷயா ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் மீனலோயினி, விஸ்வலிங்கம் நாகேஸ்வரி, பத்மநாதன் பவளராணி, காலஞ்சென்ற ஈஸ்வரன் மற்றும் கமலராணி ஆகியோரின் மருமகனும், தாமோதரக்குமார் பத்மாவதி, நடேசன் மற்றும் காலஞ்சென்ற பராசக்தி, காலஞ்சென்ற தியாகராஜா இராமச்சந்திரன், பாலச்சந்திரன் பரமேஸ்வரி, காலஞ்சென்ற ஞானச்சந்திரன் செல்வராணி, காலஞ்சென்ற தியாகராஜா பிறேமச்சந்திரன், சந்திரசேகரம் வள்ளிநாயகி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (29.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் நெணியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு : 077 297 8999**
**077 540 0885**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR 43297) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்க!

## மோடியிடம் மு.கா.ஸ்டாலின் மனு

**சென்னை, செப். 28**

**இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படும் பிரச்சினைக்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும் என தமிழக முதல்வர் வேண்டுகோள் விடுத்து இந்தியப் பிரதமர் மோடியிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளார்.**

டெல்லி சென்றுள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெள்ளிக்கிழமை பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார்.

சந்திப்பின்போது தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்துரைத்தார்.

எமது மீனவர்களை சிறைப்பிடித்து இலங்கைக் கடற்படையினர் துன்புறுத்துகின்றனர். இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும் மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக மீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையின் புதிய ஜனாதிபதியிடம் இதுபற்றிவலியுறுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# பொதுப் பாதுகாப்புக்கு முப்படை அழைப்பு



கொழும்பு, செப். 28

நாட்டின் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் பொது ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக முப்படையினருக்கு அழைப்பு விடுக்கும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டுள்ளார்.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை உறுப்பினர்கள் அனைவரையும் அழைப்பதற்கான உத்தரவு அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் முதன்முறையாக முப்படையினரை அழைக்கும் வர்த்தமானி அறிவித்தல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-சி)



# ஜப்பான் திட்டங்கள் விரைவில் நடைமுறை

கொழும்பு, செப். 28

ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்டுள்ள 11 திட்டங்களின் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்த ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய 11 திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும், புதிய அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு வேலைத் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் ஜப்பான் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச-சி)



# பாடசாலைகளின் நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகளை அழைக்காதீர்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, செப். 28

பாடசாலை நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகளை அழைத்து வருவதை உடனடியாக நிறுத்துமாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் அனைத்து திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைக் கல்வியின் வளர்ச்சி தற்போதைய அரசின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். எங்கள் அரசாங்கத்தின் கீழ் கல்விக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்ய முடிவுசெய்துள்ளோம். கல்வி அமைச்சு மற்றும் பரீட்சை திணைக்களம் தொடர்பில் மக்கள் மத்தியில் எழுந்துள்ள அவநம்பிக்கையை களைவதற்கு இந்த நிறுவனங்கள் செயற்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இதுவரை காலதாமதமாகி வரும் அனைத்துப் பரீட்சைப் பெறுபேறுகளையும் வெளியிடுமாறு பரீட்சை திணைக்கள அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்புரை விடுத்தார். (ச-சி)

# போக்குவரத்துக்கு இடையூறு உடன் சட்டநடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 28

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் ஏழாலை உப அலுவலக ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள பொது வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனங்கள் நிறுத்துதல், வியாபாரப் பொருள்கள் வைத்திருப்பது போன்றவை தடைசெய்யப்பட்டுள்ளன. இதனை மீறுவோருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 65 இன் கீழ் உள்ள பொது வழிகள் ஒழுங்குபடுத்தல் விதிகளுக்கு அமைவாக இந்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-22,66)

# மின்சாரசபைத் தலைவராக திலக் சியம்பலாபிட்டிய

கொழும்பு, செப். 28

இலங்கை மின்சாரசபையின் தலைவராக கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி சியம்பலாபிட்டிய, இலங்கை, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் மின்சக்தி துறையில் 40 வருட அனுபவத்தைக் கொண்டவர்.

2004- 2006 காலப்பகுதியில் இலங்கை வலுசக்தி முகாமையாளர்கள் சங்கத்தின் தலைவராகச் செயற்பட்டுள்ள அவர், 1982 - 1984 இல் இலங்கை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் வலுசக்தி செயலணியிலும் பணியாற்றியுள்ளார்.

அத்துடன் இலங்கை மின்சாரசபையில் உற்பத்தி திட்டமிடல் பிரிவில் பிரதம பொறியியலாளராகக் கடமையாற்றியுள்ள அவர், மேலும் பல பதவிகளையும் வகித்துள்ளார்.

மின்சார விலை நிர்ணயம், ஒன்றோடொன்று கிரிட் இணைப்பு, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கிரிட் இணைக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான பல்வேறு சிக்கல்கள் மற்றும் ஆய்வுகளில் அவர் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)



# மின்கட்டணக் குறைப்பு பகுப்பாய்வு ஆரம்பம்

கொழும்பு, செப். 28

மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பில் பகுப்பாய்வு ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சாரசபையின் தலைவர் திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதன் அறிக்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளதாகவும், புதிய நாடாளுமன்றக் கூட்டத்தின் பின்னர் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

அத்துடன் மக்களுக்கு அதிகபட்ச நிவாரணம் கிடைக்கும் வகையில் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்பதே புதிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றும் இலங்கை மின்சாரசபையின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இல்மனைட் அகழ்வு:

# மக்கள் இணக்கப்பாட்டுடனேயே முன்னெடுக்க இரு தரப்பும் சம்மதம்

## மாவட்டச் செயலர் கனகேஸ்வரன் தெரிவிப்பு

மன்னார், செப். 28

மன்னார் கரையோரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற இல்மனைட் அகழ்வு தொடர்பாக பொது அமைப்புகள் மற்றும் மாஸ் மினரல் நிறுவனம் ஆகிய இரு தரப்பும் பொது மக்களின் அனுமதியுடனும், மக்களின் விருப்பத்துடனும், அரசாங்கத்தின் அனுமதியின் பிரகாரம் இதை முன்னெடுக்கவேண்டும் என இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் கரையோரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற இல்மனைட் அகழ்வு தொடர்பாக அவசர கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இல்மனைட் அகழ்வு சம்பந்தமான மாஸ் மினரல் நிறுவனத்தின் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர், மன்னார் கரையோரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற இல்மனைட் அகழ்வு சம்பந்தமாக மாஸ் மினரல் நிறுவனத்தால் அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேற்படி நிறுவனத்தினர் புவிச்சரித வியல் திணைக்களம் மற்றும் கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றிடம் பெற்றுக்கொண்ட அனுமதியுடன் தமது ஆராய்ச்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களின் தலைவர்கள், பொது அமைப்புகள், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விசேட கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெற்றது.

இது மிகவும் ஆக்கபூர்வமானதாக இருந்தது. எதிர்காலத்தில் அவர்கள் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் தொடர்பாக பொது அமைப்பின் பிரதிநிதிகளுக்குத் தெளி வுபடுத்தப்படும். அதன் பின்னர் பொது அமைப்பினர் இங்குள்ளவர்களுடன் கலந்துரையாடுவார்கள். இது தொடர்பான அறிக்கையை ஜனாதிபதிக்கும், மாஸ் மினரல் நிறுவனத்துக்கும் பொது அமைப்பினர் வழங்குவார்கள். அதை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும். மக்களுக்கு திருப்திகரமாக விழிப்பு ணர்வை ஏற்படுத்தியதன் பின்னர் பொது மக்களின் அனுமதியுடனும், மக்களின் விருப்பத்துடனும், அரசாங்கத்தின் அனுமதியின் பிரகாரம் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவேண்டும் என இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளனர்.

இரு தரப்பினரின் அனுமதியுடன் குறித்த திட்டம் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் இங்கு கிடைக்கும் இலாபத்தில் கூடுதலான பங்கை இப்பிரதேச மக்களும் அனுபவிக்கக் கூடிய வகையில் அதனைப் பகிர்வதற்கும் இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளனர். இவ்விடயங்களை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு, திட்டம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார்.

(ஓ-56)

# இறைவனின் வரம்தான் ஊழலற்ற ஜனாதிபதி!

## வடக்கு ஆளுநர் பெருமிதம்

யாழ்ப்பாணம், செப். 28

ஊழலற்ற மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கு புதிய ஜனாதிபதி கிடைத்தமை இறைவனின் செயல் என வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே வடமாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது கிடைத்துள்ள ஜனாதிபதி, நாம் எவருக்கும் பயப்படாது மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்து செல்வதற்குரிய ஒருவர் என்பதை தெரிவிப்பதில் நான் மகிழ்வடைகின்றேன். இவர் ஜனாதிபதியாக வந்ததால் மாத்திரமே நான் இந்த பதவியை பெற்றுக் கொள்கிறேன். வேறு எந்த ஜனாதிபதி வந்திருந்தாலும் இந்தப் பதவி எனக்கு கிடைத்திருக்க மாட்டாது. வேறொருவர் எனக்குப் பதவியை தந்திருந்தாலும் நான் இதனை ஏற்றுக்கொள்ளவும் மாட்டேன் - என்றார். (அ-ம-20)

# ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம் , செப். 28

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் 321 ஆவது புரட்டாதி மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் தலைவர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெற்றது.

ஆசிரியர் துரை கணேசமூர்த்தி புரட்டாதி மாத ஞானச்சுடர் சஞ்சிகைக்கான வெளியீட்டுரை மற்றும் மதிப்பீட்டுரையை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

(ச-66)

### உச்சக்கட்டப்...

இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் நவம்பர் மாதம் 14ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல் பரபரப்புகள் உச்சம் பெற்றுள்ள பின்னணியில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் இடம்பெறுகின்றமையால் இன்றையதினம் பரபரப்புகளுக்குப் பஞ்சம் இருக்காது என்றே கருதப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆசனப் பங்கீடுகள் தொடர்பில் இன்று தீர்க்கமான முடிவுகள் எட்டப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், தமிழரசின் மத்திய குழுக்கூட்டத்தில் இன்று பெரும் களேபரம் ஏற்படும் என்று கருதப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலின்போது, சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்று தமிழரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்திருந்தது. ஆனால், அந்த முடிவுக்கு மாறாக தமிழ்ப் பொதுவேட்பாளரை கட்சியின் கிளைத் தொகுதிகள் ஆதரித்திருந்தன. இந்த விடயமும் இன்று பேசுபொருளாகும் என்றும், அத்துடன், தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறங்கிய அரியநேந்திரனுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைக்கு இன்று பரிந்துரைக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-26)

### நாடாளுமன்றத்...

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் என்னை நம்பி வாக்களித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பியிருந்தார்கள். எமது கட்சியில் உள்ள துடிப்புமிக்க இளைஞர்களுக்கு வழிவிட்டு அரசியலில் முதிர்ச்சி உள்ளவர்கள் அவர்களுக்கு பக்கபலமாக நின்று வழிகாட்ட வேண்டும்என்பதேஎனதுவிருப்பமாகும். இதற்கு முன்மாதிரியாக நான் எமது தமிழ் மக்கள் கூட்டணியின் பணிகளில் தொடர்கின்ற அதேவேளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடாது இளைஞர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்து அவர்களுக்குத் தொடர்ந்தும் துணைநிற்க முடிவுசெய்துள்ளேன்.

எனினும் தமிழ் மக்களுக்கான எனது அரசியல் பயணம் தொடரும். சர்வதேச ரீதியாக எனக்கிருக்கும் தொடர்புகளின் ஊடாக எமது மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கு நான் தொடர்ந்து உழைப்பேன். என்னைப் போல் மற்றைய தமிழ் கட்சிகளில் உள்ள அரசியல் முதிர்ச்சி கொண்டவர்கள் தாம் வழி காட்டியாக நின்று கொண்டு இளைஞர்களுக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் விட வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றுள்ளது.

(அ-ஒ-20-26-66)

### வவுனியாவில்...

குருக்கள்புதுக்குளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதையடுத்து இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்துக்குள்ளான மோட்டார்சைக்கிள் தீப்பற்றி எரிந்ததுடன், அதில் பயணித்த இளைஞரான செல்வகுமார் சர்மிளன் (வயது -30) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-18-110)

### பாம்பு...

சாவகச்சேரி நுணாவில் வைரவர் கோவில் பகுதியைச் சேர்ந்த வினோத் (வயது -29) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (அ-ம-66-555-20)

### சாவகச்சேரி...

பொறுப்பேற்ற மகப்பேற்று நிபுணர் சிறீ சுபாஸ்கரன் தலைமையிலான மருத்துவக் குழுவும் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டனர்.

புதிய சத்திர சிகிச்சைக் கூடத்துக்கான செயற்பாடுகள் ஆரம்பமான நேற்றைய நாளில் குடலிறக்கம் சத்திர சிகிச்சை, இரண்டு சிசேரியன் சத்திர சிகிச்சைகள் மற்றும் நான்கு சிறுசத்திர சிகிச்சைகள் என்பன மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

### முன்னாள்...

வருகின்றார். இதன் தொடர்ச்சியாகவே நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மெய்ப்பாதுகாவலர்களை அவர் திரும்பப் பெற்றுள்ளார்.

சபாநாயகர், பிரதிசபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் கடமைக்காக வழங்கப்பட்டிருந்த மெய்ப்பாதுகாவலர்கள் தொடர்ந்தும் கடமையில் ஈடுபட்டிருப்பார்கள் என்றும், அவர்களின் பாதுகாப்பைத் திரும்பப் பெற வேண்டிய அவசியம் எழவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-சி)

### எளிமையாக...

சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகர், ஆளுநர் வேதநாயகனின் குடும்பத்தினர், பொலிஸ், இராணுவ உயரதிகாரிகள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். மேற்படி நிகழ்வில் பொலிஸ் அணிவகுப்பு மரியாதை நடைபெறவில்லை.

இதேவேளை, பதவியேற்பின் வடக்கு ஆளுநர் ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய தமிழ்மொழியிலேயே பதவியேற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66-20-5)

### பதில்...

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு அமைவாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 158 வருட பொலிஸ் வரலாற்றில் கான்ஸ்டபிளாக சேவையில் இணைந்து பதில் பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றுள்ள ஒரே அதிகாரியாக பிரியந்த வீரசூரிய மட்டுமே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரகுமார தெரிவு அரசியல் பூகம்பம்

### கூறுகிறார் எரிக் சொல்ஹெய்ம்

கொழும்பு, செப்.28

இலங்கை ஜனாதிபதியாக அநுரகுமார தெரிவு செய்யப்பட்டமை ஓர் அரசியல் பூகம்பம் என விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே சமாதான தூதுவராகப் பணியாற்றிய எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார் எரிக் சொல்ஹெய்ம்.

இலங்கை வரலாற்றில் பாரம்பரிய மேல்தட்டு தலைவர்களுக்கு வெளியேயிருந்து ஒரு தலைவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்முறை. அநுரவின் வெற்றி பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான அடித்தட்டு மக்களின் வெளிப்பாடு. பொருளாதார நெருக்கடியின் போது நலிவுற்ற இலங்கையர்கள் அனுபவித்த வலிக்கு இந்த முடிவு ஒரு சாட்சி.

இந்தத் தேர்தல் முடிவுகள் பல வெளிநாட்டு தலைநகரங்களின் புருவங்களை உயர்த்தச்செய்துள்ளது. இராஜதந்திரிகள் ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்திக்கவேண்டும். இந்த வெற்றிகரமான தலைவரின் பயணத்துக்கு, இலங்கையில் அமைதியையும்,சமாதானத்தையும் கட்டியெழுப்புவதற்கு நாமனைவரும் எம்மாலான உதவிகளையும் ஒத்தாசையையும் வழங்கவேண்டும்.

பேரினவாதம் தலைதூக்காத முதலாவது தேர்தல் இது. மேற்கு நாடுகள் தோல்வியடைந்த வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அநுரகுமார மீது காட்டிய அனுதாபத்திலிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் இலங்கையில் இயல்பு நிலையை மீளக் கட்டியெழுப்பிய மனிதராக ரணில் விக்கிரமசிங்க வரலாற்றில் இடம்பிடிப்பார். உலக வரலாற்றில் எந்த ஒரு தலைவரும் ஐ.எம்.எப். திட்டத்தை செயற்படுத்துவதன் அடிப்படையில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)

# தமிழ்க் கலைஞர்களுக்கு 'குவியம் விருது- 2024'

யாழ்ப்பாணம், செப். 28

இலங்கைத் தமிழ் சினிமாக் கலைஞர்களுக்கான விருது விழாவான 'குவியம் விருதுகள் 2024' நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விழாவில் முழு நீளத் திரைப்படங்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள் மற்றும் காணொலிப்பாடல்களுக்காக விருதுகள் வழங்கப்படவுள்ளன.

விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அதற்கமைய கிடைக்கப்பெற்ற நூற்றுக்கணக்கான படைப்புகளில் இருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை ஈழத்து முதுபெரும் இசைக் கலைஞர் கலைவாணர் கண்ணன் மாஸ்டருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். ஈழத் தமிழர்களுக்கு உலகெங்கும் பெருமை தேடித்தந்த ஈழத்துக் குயில் என அழைக்கப்படும் பிரபல பாடகி கில்மிஷாவுக்கும் கௌரவிப்பு விருது வழங்கப்படவுள்ளது. (ச-20)

## திருடர்கள் கைவரிசை!

யாழ்ப்பாணம் குப்பிழான் தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை வீடு வளவொன்றிற்குள் நுழைந்த திருடர்கள் அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் சைக்கிள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்ட நிலையில் சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-66)

# இலவச கண் சிகிச்சை முகாமும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்

யாழ்ப்பாணம், செப். 28

கோண்டாவில் இரத்தினம்மா கனகசபை ஞாபகார்த்த அறக்கட்டளை நடத்தும் இலவச கண் சிகிச்சை முகாமும், இலவச மூக்குக் கண்ணாடி வழங்கலும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் கோண்டாவில் இந்துக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள மேற்படி அறக்கட்டளையின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த முகாமில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்ற முடியும். கண் சம்பந்தமான மருத்துவரின் ஆலோசனைகளையும், தேவையுடையவர்கள் இலவச மூக்குக் கண்ணாடி களையும் பெற்றுப் பயன்பெறமுடியும்.

பதிவுகளை மேற்கொள்ள 0772586022 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-66)


**தேவை**

ஊர்ச்சேவல், ஊர்ப்பேடு கொள்வனவு செய்யப்படும்.

தாசன் பாம்

158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:-

**077 312 7498**

(CS/56311) J-1

**Win Repair**

உங்கள் சலவை இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி, A/C ஆகியன பழுதடைந்துவிட்டனவா? உங்கள் இடத்திற்கே நாம் வருகிறோம். உத்தரவாதத்துடன் திருத்தித் தருகிறோம்.

தொடர்பு: **076 834 6136**

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

**077 836 3050, 075 889 5625**

(CS/1452) J-1

**வீடு வாடகைக்கு**

சாவகச்சேரி இந்து கல்லூரியில் இருந்து 300m.
4 Room, 02 Hall, 02 Bathroom நவீன அனைத்து வசதியுடன் கூடிய வீடு.

**077 77 59 791**
**075 50 83 632**

**English Classes**

தனி மற்றும் குழுவாக அல்லது

Zoom மூலமாகவும்
Gr 1 to O/L

Covering areas
- Grammar
- Spoken
- Reading
- School Book
- Listening
- Past papers and Model Papers

தொடர்பு:- **077 331 4608**



# மரண அறிவித்தல்

தோற்றம்
31 - 03 - 1963



மறைவு
26 - 09 - 2024

## கனகசபை இரத்தினபூபதி

காரைநகர் வளுப்போடையைப் பிறப்பிடமாகவும், விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை இரத்தினபூபதி அவர்கள் நேற்று முன்தினம் (26.09.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காசிப்பிள்ளை - அன்னபூரணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம் மற்றும் சரஸ்வதி, சுப்பிரணியம், சிவபாலன், காலஞ்சென்ற தவபாலன் (கோபி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சசிகலா (லண்டன்), லோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சற்குணராசா (லண்டன்), சஞ்சீவ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கபிசா (லண்டன்), யசிந்தன் (லண்டன்), சஜிந்தன் (லண்டன்), றஜிந்தன் (லண்டன்), றக்சா (லண்டன்), சுஜன் (லண்டன்), சுபிக்சா (லண்டன்), அபிசா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளை.

(CS/1453) J-1



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம் 28.02.1964 மறைவு 29.08.2024

கடந்த 29.08.2024 அன்று அமரத்துவம் அடைந்த

அமரர்
**சிவகுமாரன் தியாகவதி**
(ஓய்வுபெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்-யாழ். கல்வி வலயம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 26.09.2024 வியாழக்கிழமை அன்று கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றன.

வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.09.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து அன்பு உள்ளங்களையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தயவுசெய்து இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.
தொ.பே.இல:077 118 4998

(CS 1458) A-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.